මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES



මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல / My No: PMM/Eval/2024 (2)
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2024.02.01

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள்

## 2025 வருடத்திற்கான மதிப்பீட்டு முன்மொழிவுகளுக்கு அழைப்புவிடுத்தல்

“இலங்கையின் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை செயற்படுத்தல் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து அரச நிறுவனங்களின் வகிபாகங்களும் பொறுப்புகளும்” என்ற தலைப்பிலான கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்கள சுற்றறிக்கை இல 01/2024 இனூடாக வலியுறுத்தப்பட்டுள்ள விடயங்களில் விஷேட கவனத்தினை செலுத்துவதன் மூலம் 2025 நிதியாண்டில் அரச வரவு செலவு திட்டத்தினூடாக நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்காக முன்னுரிமை கருத்திட்டங்களாக கருதப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை மதிப்பிடுவதற்கான முன்மொழிவுகளுக்கு அழைப்புவிடுக்கப்படுகின்றது.

02. பொதுத் துறையில் மதிப்பீட்டுச் செயல்முறை என்ற புதிய எண்ணக்கருவினை கருத்திற் கொண்டு 2025ம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய பொருத்தமான மதிப்பீட்டு முன்மொழிவுகளை தேர்ந்தெடுக்கும் போது ஒவ்வொரு அமைச்சினதும்/ மாகாணசபையினதும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படும் ஒரு மதிப்பீட்டு முன்மொழிவு மட்டும் கவனத்தில் கொள்ளப்படும் என்பதுடன் அதற்கமைய உரிய மதிப்பீட்டு முன்மொழிவினை 2024.03.15ம் திகதிக்கு முன்னர் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அம்முன்மொழிவுகள் தேசிய மதிப்பீட்டு வழிகாட்டல் குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதனால், தேசிய மதிப்பீட்டு கொள்கையினை செயற்படுத்தும் கட்டமைப்பின் வழிகாட்டல் இலக்கம் 17 இற்கமைவாக மற்றும் இணைப்பு இலக்கம் XV இற்கமைய தயாரித்து, மதிப்பீட்டு தகுதிக்கான மதிப்பீடு, (இணைப்பு II) மற்றும் மதிப்பீட்டு செயற்றிட்டத்துடன் (இணைப்பு IX) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

03. நிலவும் நிதி நெருக்கடி மற்றும் வரையறைகளை கருத்திற்கொண்டு நிரல் அமைச்சுக்களினால் மதிப்பீட்டு முன்மொழிவுகள் தெரிவு செய்யப்படும் போது கீழே தரப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

3.1 கருத்திட்ட முகாமைத்துவ சுற்றறிக்கை இல: 01/2024 இன் உப பிரிவு இல 10 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மாற்று நிதி ஆதாரங்கள் மூலம் நிதி ஒதுக்கீடுகளுக்கு ஏற்பாடு செய்வதனூடாக 2025ம் வருடத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் மதிப்பீடுகளுக்கான முன்மொழிவுகள்.

3.2 சில அபிவிருத்தி கருத்திட்டங்களின் செலவு மதிப்பீட்டினுள் மதிப்பீட்டிற்காக முன்மொழியப்பட்டுள்ள செலவு உள்ளடக்கப்பட்டிருப்பதனால், அவ்வாறான கருத்திட்டங்களுக்குரிய ஒதுக்கீட்டினை பயன்படுத்திக்கொள்வதனூடாக 2025ம் வருடத்தினுள் மதிப்பீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள்.

3.3 மேற்குறிப்படப்பட்டுள்ள 3.1 மற்றும் 3.2 இன் கீழுள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டாலும், கொள்கை ரீதியான தீர்மானத்திற்கமைய முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்தக் கூடிய மதிப்பீடுகள் தொடர்பான முன்மொழிவுகள்.

3.4 அபிவிருத்தி கருத்திட்டங்களின் காலத்தின் 50% கடந்த பிறகும், அவற்றின் ஒட்டுமொத்த உண்மையான முன்னேற்றம் 25% இனைக்கூட அடைந்துகொள்ளாத சந்தர்ப்பங்களில் அக்கருத்திட்டங்களுக்கான மதிப்பீட்டு முன்மொழிவுகள்.

04. சமர்ப்பிக்கப்படும் மதிப்பீட்டு முன்மொழிவுகள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மதிப்பீட்டின் தகுதிகாண் மதிப்பீட்டுடன் இணைத்து தேசிய மதிப்பீட்டு வழிகாட்டுதல் குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். தேசிய மதிப்பீட்டு வழிகாட்டுதல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு முன்மொழிவுகள் தொடர்பாக 2024.05.31ம் திகதிக்கு முன்னர் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் உரிய நிறுவன தலைவர்களுக்கு அறியத்தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

05. 2025ம் வருடத்தினுள் செயற்படுத்துவதற்காக தேசிய மதிப்பீட்டு வழிகாட்டுதல் குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்ளும் மதிப்பீட்டு முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் 2024 ஜூன் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படும், அச்செயற்பாடுகளை உரிய முறையில் நிறைவு செய்வதற்காக நன்கு தயாராக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்புடைய பங்குதாரர்களை ஒழுங்குபடுத்துவது அனைத்து நிறுவன தலைவர்களினதும் பொறுப்பாகும்.

06. மதிப்பீட்டு முன்மொழிவுகளை தயாரிக்கும் போது ஏதேனும் தொழில்நுட்ப உதவி தேவைப்படுமாயின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் அல்லது தொலைபேசி இலக்கத்தினூடாக கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினை தொடர்பு கொள்ள முடியும்.

மின்னஞ்சல் - dgpmm@pmmd.treasury.gov.lk
தொலைபேசி - 011 2151444

**ஓப்பம்/** கே.எம். மகிந்த சிறிவர்தன.
செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
மற்றும் திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் :
01. ஜனாதிபதியின் செயலாளர்
02. பிரதம மந்திரியின் செயலாளர்
03. அமைச்சரவை செயலாளர்
04. செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம்
05. கணக்காய்வாளர் நாயகம்